# வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
## WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE
(Girraween Public School, 9 Bando Road Girraween NSW 2145)
PO Box 557 Email: info@wtsc.org.au Web: www.wtsc.org.au
Wentworthville NSW 2145 www.facebook.com/tamilstudy/


## வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தின் வரலாற்றுச் சாதனை!

2018ம் ஆண்டுக்கான நியூ சவுத் வேல்ஸ் மாநில உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவந்திருக்கின்றன. 2010ம் ஆண்டிலிருந்து பல மாணவர்கள் வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தில் கல்விகற்று உயர்தரப் பரீட்சையில் தமிழை ஒரு பாடமாக எடுத்துவருகின்றார்கள். இந்த வகையில் எமது வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்திலிருந்து 18 மாணவர்கள் இவ்வருடம் உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப் பாடத்தில் தோற்றி **13 மாணவர்கள் அதிஉயர் நிலையையும் (Band 6), 2 மாணவர்கள் உயர் நிலையையும் (Band 5), 3 மாணவர்கள் திறமைச் சித்தியையும் (Band 4) பெற்றுள்ளனர்**.

இம் மாணவர்கள் அனைவருக்கும் வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தின் சார்பில் பாராட்டுக்கள். தொடர்ந்தும் தமிழோடு இணைந்திருக்க அவர்களை வேண்டிக்கொள்கின்றோம். இம்மாணவர்கள் அனைவருதும் அவர்களின் பெற்றோர்களினதும் தமிழ் ஆர்வத்தைப் போற்றுகின்றோம்.




*வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலைய 2018ம் ஆண்டு உயர்தர மாணவர்கள் ஆசிரியர்களுடன் (படம் 1)*

மேலும், எமது பாடசாலை மாணவர்களே மாநில மட்டத்தில் முதல் மூன்று நிலையிலும் வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். **செல்வன். ஹரிஷ்ணா செல்வவிநாயகன் மாநில நிலையில் முதலாவதாகவும், செல்வி. ப்ரீத்தி சக்தி சிவபாலன் மாநில நிலையில் இரண்டாவதாகவும், செல்வி. பூமிஜா சண்முகதாஸ் மாநில நிலையில் மூன்றாவதாவும் வந்து வென்ற்வேத்வில் தமிழ்ப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்**.

# வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

## WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

(Girraween Public School, 9 Bando Road Girraween NSW 2145)

PO Box 557 Email: info@wtsc.org.au Web: www.wtsc.org.au

Wentworthville NSW 2145 www.facebook.com/tamilstudy/




*வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலைய 2018ம் ஆண்டு உயர்தர மாணவர்கள் ஆசிரியர்களுடன் (படம் 2)*

இச்சந்தர்ப்பத்தில் இம்மாணவர்களின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் வென்ற்வேத்வில் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களே என்பதை நன்றியோடு நினைவுகூருகின்றோம். ஆரம்பப் பள்ளி முதல் இம் மாணவர்களுக்குச் சிறுகச் சிறுகத் தமிழூட்டிய அனைத்து வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலைய ஆசிரியர்களும் பெருமைப்படும் தருணத்தில் ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது தாழ்மையான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆரம்பப் பள்ளியிலும், இடைநிலைப் பள்ளியிலும், மேல் நிலைப் பள்ளியிலும் எமது தமிழாசிரியர்கள் வழங்கிய தமிழறிவும் ஊக்கமுமே இம் மாணவர்களை உயர் பள்ளியில் தமிழைக் கற்க வழிவகுத்தது.

எமது உயர்வகுப்பு ஆசிரியர்கள் கடந்த சில வருடங்களாக இம்மாணவர்களின் தமிழறிவை மேலும் மெருகூட்டிச் செப்பனிட்டு திறம்படப் பரீட்சைக்குத் தயார்படுத்தியுள்ளனர். சனிக்கிழமை பாடசாலை நேரத்தில் மட்டுமல்லாது, வியாழக்கிழமை இரவுகளிலும், பாடசாலை விடுமுறை நாட்களிலும் தமது சொந்த வேலைகளை எல்லாம் தள்ளி வைத்துவிட்டு இம்மாணவர்களுக்குத் தமிழ் அறிவூட்டிய எமது உயர்தரத் தமிழ் ஆசிரியர்கள் அனைவருக்கும் உயர்தர இணைப்பாளர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்.

# வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
## WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE
(Girraween Public School, 9 Bando Road Girraween NSW 2145)
PO Box 557 Email: info@wtsc.org.au Web: www.wtsc.org.au
Wentworthville NSW 2145 www.facebook.com/tamilstudy/


முப்பத்தொரு ஆண்டுகளாக வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட நிர்வாகக் குழு அங்கத்தவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், தமிழார்வலர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எமது பாடசாலையின் வளர்ச்சியில் கைகோர்த்து நிற்குமாறு உங்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கிறோம்.

பெற்றோர்களே, இச்சந்தர்ப்பத்தில் உங்கள் பிள்ளைகளின் தமிழ் மொழிக் கற்கைச் செயற்பாடுகளில் தொடர்ந்தும் அவர்களுக்கு உறுதுணையாக இருங்கள். உங்கள் பயன் கருதி உயர்தரத்தில் தமிழ்ப் பரீட்சைத் தேர்வுபற்றிய சில விடயங்களைப் பகிர்கிறோம்; உயர்தரப் பரீட்சை நான்கு பகுதிகளைக் கொண்டது: எழுத்தாக்கம் (20%) வாசித்துப் பதிலளித்தல் (25%) கேட்டுப் பதிலளித்தல் (30%) மற்றும் வாய்மொழித் தொடர்பாடல் (25%). பெரும்பாலும் எமது மாணவர்கள் பிரதான பாடசாலையில் 11ம் வகுப்பிற் கற்கும்போது உயர்தரத் தமிழ்ப் பரீட்சையில் தோற்றுகிறார்கள். சில மாணவர்கள் 10ம் வகுப்புக் கற்கும்போதும் உயர்தரத் தமிழ்ப் பரீட்சையில் தோற்றியிருக்கிறார்கள். உங்கள் பிள்ளைகள் கற்கும் பிரதான உயர்தரப் பாடசாலையின் அனுமதி அவசியமனது. இதுபற்றிய மேலதிக விபரங்களை நீங்கள் எமது பாடசாலையிற் பெற்றுக்கொள்ளலாம்.

அது மட்டுமல்ல, நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசாங்கம் ஆரம்பப் பள்ளி முதல் ஆண்டு 10 வரையான வகுப்புகளுக்கும் கூட தமிழ் மொழிப் பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தும் வேலைகளை ஆராம்பித்துள்ளது (K-10 Tamil Syllabus Implementation). இது நமது தமிழ் மொழிக்கு புலம்பெயர்ந்து வாழும் நாட்டில் கிடைத்த மற்றுமொரு அங்கீகாரமாகும்.

ஆகவே அன்பார்ந்த பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளை தமிழ் கற்பதற்கு தமிழ்ப் பாடசாலைக்கு அனுப்பி வையுங்கள். இதனால் தமிழ்மொழியை புலம்பெயர் மண்ணில் வாழ வைப்பதோடு உயர்தர பரீட்சைக்கு ஒரு பாடமாகவும் எடுப்பதற்கான ஒரு இனிய சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**செம்மை முறை வழி செந்தமிழ் பள்ளியைச் சேர்ந்து வளர்த்திடுவாம்!**
**எம்மையும் ஆதரித்தின் தமிழ் பயிற்றிடும் ஈடில்லா நிலையமிதே!!**
**எங்கும் தமிழ் மொழி எதிலும் தமிழ் மணம் எழிலுடன் வழியவே!!!**

நன்றி.
அன்புடன்,
நிர்வாகக் குழு 2018.
வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்.